தினமலர் ஈரோடு, செப்டம்பர் 6, 2004 பக்கம் - 3

# சாத்தியமில்லை!

## காளிங்கராயன் கதையை படமாக்குவதற்கு ஈரோட்டில் நடிகர் சத்தியராஜ் திட்டவட்டம்

ஈரோடு,செப்.6-

காளிங்கராயன் கதையை படமாக்குவதற்கான சத்தியக் கூறுகள் இல்லை என ஈரோட்டில் நடைபெற்ற காளிங்கராயன் நூல் வெளியீட்டு விழாவில் நடிகர் சத்தியராஜ் திட்டவட்டமாக தெரிவித்தார்.

ஈரோடு கொங்கு கலையரங்கத்தில் காளிங்கராயன் கதை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஈரோடு எஸ்.கே.எம்.நிறுவனங்களின் தலைவர் மயிலானந்தம் தலைமை வகித்து காளிங்கராயன் கதை நூலை வெளியிட்டார். மத்திய சமூக நலம் மற்றும் சமூக நீதித்துறை இணை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் காளிங்கராயன் திருஉருவ படத்தை திறந்து வைத்தார். முன்னதாக சென்னை கொங்கு நண்பர்கள் சங்க தலைவர் காளியண்ணன் வரவேற்றார்.

விழாவில் நீதியரசர் செங்கோட்டுவேலவன், திரைப்பட நடிகர் கலைமாமணி சிவக்குமார், காளிங்கராயான் நூல் ஆசிரியர் பாஸ்கரதாசன், டாக்டர்.சிலம்பொலி செல்லப்பன், உழவர் உழைப்பாளர் கட்சி செல்லமுத்து உள்ளிட்ட பலர் பேசினர்.

விழாவில் திரைப்படக் கலைஞரும், இயக்குநருமான விஜய் கிருஷ்ண ராஜ் பேசியதாவது: கொங்கு சமுதாயத்தில் தோன்றிய பொன்னர் சங்கர், தீரன் சின்னமலை, காளிங்கராயன் ஆகியோரின் வீர தீர சாகசங்கள், கொடை பண்பு உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் அடங்கிய காவியங்கள் உள்ளன. ஆனால் இந்த காவியங்கள் முழுமையாக மக்களை சென்றடையவில்லை.

எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதி மக்களும் கொங்கு சமுதாய வீரர்களின் வரலாற்றை தெரிந்து கொள்ளும் வகையில் காவியங்கள் புத்தக வடிவிலேயே நின்று விடாமல் படமாகவோ அல்லது டிவி தொடராகவே தயாரிக்கப்பட வேண்டும்.

இக் காவியப் படத்தை தயாரிப்பதற்கு பல்வேறு தொழிலதிபர்கள் நிதி வசதி அளிக்க தயாராக இருப்பதால் நடிகர்கள் சிவக்குமார், சத்தியராஜ் ஆகியோர் படம் எடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள முன் வரவேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து நடிகர் சத்தியராஜ் பேசுகையில், காளிங்கராயனின் வீர தீர செயல்கள், தியாகம் உள்ளிட்ட பல்வேறு அரிய தகவல்களை இப்புத்தகத்தின் வாயிலாக இப்போது தான் நானே தெரிந்து கொண்டேன். அவ்வளவு அறிய தகவல்களை நூல் ஆசிரியர் திரட்டியிருப்பது பாராட்டுக்குரியதாகும். அந்த காலத்தில் காளிங்கராயன் தனது பகுதி மக்கள் நன்மை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் 12 வருடங்களாக போராடி பல்வேறு இன்னல்களை சந்தித்து காளிங்கராயன் கால்வாயை ஏற்படுத்தினார். புதியதாக ஏற்படுத்தப்பட்ட கால்வாயில் இருந்து வந்த தண்ணீரை தனது குடும்பத்தினர் யாரும் பயன்படுத்தக் கூடாது என்ற காரணத்திற்காக அங்கிருந்து குடிபெயர்ந்து ஆனை மலை பகுதிக்கு சென்று குடியேறினார். இது போன்ற தன் நல மற்ற பண்பை கொங்கு சமுதாய மக்கள் ஒவ்வொரும் தங்களது வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும். காளிங்கராயன் படம் எடுப்பது என்பது சிரமமான காரியமாகும். ஏற்கனவே நான் பெரியார் காவியப் படம் நடிப்பதற்கு முயற்சி மேற்கொண்டும் யாரும் படம் எடுப்பதற்கான முயற்சி எடுக்கவில்லை. இதேபோல் நடிகர் கமலஹாசன் மருதநாயகம் என்ற காவியப் படத்தை எடுக்க முடியாத நிலையில் இருந்து வருகிறார். அந்த காலத்தில் காவியப்படங்கள் எடுப்பது சாத்தியமான ஒன்றாக இருந்து வந்தது. ஆனால் தற்போது காவியப்படம் எடுப்பது என்பது சாத்தியமில்லை. இருப்பினும் காளிங்கராயனின் சிலையை தமிழகத்தில் எந்த பகுதியில் வைத்தாலும் அதற்கு ஆகும் முழு செலவையும் ஏற்க தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் காளிங்கராயன் வம்சா வழியினர் கிருஷ்ணராஜ் காளிங்கராயர், மோகன்ராஜ் காளிங்கராயர், அருண்குமார் காளிங்கராயர் மற்றும் ஈரோடு யு.ஆர்.சி. நிறுவனங்களின் தலைவர் சின்னசாமி, ஈரோடு சக்தி மசாலா நிறுவனங்கள் தலைவர் துரைசாமி, ஈரோடு வேளாளர் கல்வி நிறுவனங்கள் தாளாளர் சந்திரசேகர், ஈரோடு கொங்கு கலையரங்க தலைவர் வேலுச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.